நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது, புரட்சித் தலைவர் ஆட்சி ஏழைகளின் பக்கமா பணக்காரர்களின் பக்கமா என்பதை இதிலிருந்தாவது அறிந்து இந்த ஆட்சி ஏழை மக்களின் ஆட்சி என்பதால், எடுக்கும் காரியங்கள் அனைத்தும் நற்காரியங்களாகத் தான் இருக்கும் என்பதையும் சொல்லி, இந்த அவையிலே எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(11) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

153. பத்மநாபபுரம் நகராட்சி மன்றத்தில் அரிசனங்களுக்கு இரு இடங்களும், மகளிருக்காக ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யவும் மற்றும் பத்மநாபபுரம் நகராட்சியை 20 வார்டுகளாகப் பிரிப்பதற்காகவும் 4–12–1978 ஆம் தேதியிடப்பெற்ற ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1865 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

154. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

155. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

199. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1978) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை.

200. 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையின் 24 ஆம் பத்தி மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS